JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 214/2013 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW 4 | Prosecution /Defence / Court | |
| Name | Chandirasekaran | Caste | |
| Father's Name | S/o.Palanisamy | Calling | |
| Village | Appichimadam, Chennimalai road, | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 25.03.2022

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து கொண்டு சென்னையில் தற்போது டையிங் வேலை செய்து வருகிறேன். என் மனைவி பிரவினாவின் தோழி கௌசிகாவை எனக்கு 2010 லிருந்து தெரியும். கடந்த 2011-ம் வருடம் கௌசிகா விக்ரமன் என்பவரை காதலித்து பின்னர் பெரியோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டு பெருந்துறையில் குன்னத்தூர்ரோட்டில் உள்ள சர்ச் அருகில் வசித்து வந்தார். பின்னர் கௌசிகா அடிக்கடி என் மனைவியை பார்க்க வருவது வழக்கம். பின்னர் அவ்வாறு வரும்போது தன் கணவர் தன்னை சந்தேகித்து அடிக்கடி அடித்து கொடுமை படுத்தியதாக என் மனைவியிடமும், என்னிடமும் சொல்லி அழுதுள்ளார். பின்னர் நானும் என் மனைவியும் சேர்ந்து சமாதானம் செய்வதற்காக கௌசிகா வீட்டிற்கு சென்று சமாதானம் பேசி வருவோம். பின்னர் 4 மாதங்கள் நன்றாக இருந்தார்கள். பின்னர் கௌசிகா 4 மாதம் கருவுற்றிருந்தார். அப்போது மறுபடியும் சண்டை ஏற்பட்டு விக்ரம் வயிற்றில் எட்டி உதைத்ததில் அவருக்கு வலி தாங்கவில்லை என்று எங்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். உடனே நாங்கள் இருவரும் கௌசிகா வீட்டிற்கு

சென்று உடனே வேலுசாமி மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். பின்னர் மருத்துவமணையில் பரிசோதித்த மருத்துவர் அவருக்கு கருகலைப்பு செய்ய வேண்டும் என்று கூறியதால் உடனே அவர் பெற்றோருக்கு தகவல் தெரிவித்த உடன் அவர் பெற்றோர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். பின்னர் நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். கௌசிகா அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாக தெரிந்துகொண்டேன். பின்னர் கோயமுத்தூர் துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2022.

Signature of Interpreter